**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், குளித்தலை**

**அசல் வழக்கு எண் 223/2015**

**பிரதிவாதி தரப்பு சாட்சி-1 செந்தில் திருமதி.ஏ.பிரேமா பெஞ்ச் கி**ளார்க் அவர்களால் 44/1969 வது பிரிவின் கீழ் பிரமாணம் செய்யப்பட்டு 01.02.2025 ம் தேதியில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

**வாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

**1)** தாவா முதல் அயிட்ட சொத்திற்கு கிழக்குபுறம் எனது சொத்து உள்ளது என்றால் சரிதான். சர்வே எண். 398/22 ல் பிள்ளை யார்கோவில் உள்ளது என்றால் அது காலி நத்தம் அதில் கோவில் உள்ளது. சர்வே எண்.398/22 எவ்வளவு விஸ்தீர்ணம் என்றால் சுமார் 1½ ஏக்கர் இருக்கும். தாவா பி செட்டியூல் எவ்வளவு இடம் என்றால் 3 செண்ட், அது சர்வே எண்.398/22 ல் தான் உள்ளது. சர்வே எண்.398/17 வடபுறம் கிழமேல் பஞ்சாயத்து பாதை உள்ளது என்றால் சரிதான். தாவா பி செட்டியூலுக்கு மேற்குபுறம் காலியிடம் உள்ளதா என்றால் தார் ரோடு செல்கிறது. சர்வே எண்.398/22 ல் கிழமேல் பொதுப்பாதைக்கு வடக்கே மேற்குபுற ஓரமாக காலியிடம் உள்ளது.

2) வா.சா.ஆ.4 ல் உள்ளவாறுதான் சர்வே எண்.398/17 க்கு வடபுறம் உள்ள இடம் தான் பொதுப்பாதை என்றால் சரிதான். சர்வே எண்.398/17 க்கு மேற்குபுறம் காலியிடம் உள்ளது என்றால் சரிதான். எங்கள் நிலத்திற்கு எப்போது பட்டா கொடுத்தார்கள் என்றால் சுமார் 30 வருடத்திற்கு முன்பு கொடுத்தார்கள். தாவா 2 ம் அயிட்ட சொத்தில் கோவில் வீடு இருந்து இடிந்துவிட்டது எனக்காட்ட ஆவணம் ஏதேனும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. தாவா 2 ம் அயிட்ட சொத்தில் கோவில் வீடு இருந்திருந்தால் புல வரைபடத்தில் குறிப்பிடப்பட்டிருக்கும் என்றால் அது எங்கள் தனிப்பட்ட கோவில் என்பதால் குறிப்பிடப்படவில்லை.

3) அந்த இடத்திற்கு பட்டா கேட்டோம். அவர்கள் கட்டிடம் ஏதாவது இருந்தால் பட்டா கொடுப்பதாக சொல்லிவிட்டார்கள். அவ்வாறு சொன்னதற்கு ஏதேனும் ஆவணம் உள்ளதா என்றால் இல்லை. நான் பட்டா கேட்டு விண்ணப்பித்த மனுவினை தாக்கல் செய்துள்ளேனா என்றால் என் அண்ணன் 1ம் பிரதிவாதிக்குதான் தெரியும். அவர் தற்போது இறந்துவிட்டார். கோவில் வீடு கட்டுவது சம்பந்தமாக ஏதாவது எங்கள் பங்காளிகளுக்குள் ஆவணம் எழுதிக்கொண்டோமா என்றால் இல்லை. இவ்வழக்கில் இடைக்கால தடை உத்தரவு பிறப்பித்த விபரம்

தெரியுமா என்றால் அதற்கு நான் ஆட்சேபணை தெரிவித்துள்ளேன். தற்போது வரை மேற்படி உத்தரவு அமலில் உள்ளது என்றால் சரிதான்.

4) இவ்வழக்கில் நிலுவையில் உள்ளபோது வாதி மணியிடம் பிரச்சனை செய்து அவரை அடித்துவிட்டோம் என்றால் சரியல்ல. அது சம்பந்தமாக 12.08.2019 ல் வாதி மணி காவல்நிலையத்தில் புகார் கொடுத்தாரா என்றால் அதுபற்றி தெரியவில்லை. என்னை காவல்துறையினர் விசாரித்தார்களா என்றால் இல்லை. நான் சொல்வது தவறு என்றும், வாதி புகார் கொடுத்ததின் அடிப்படையில் விசாரணை நடைபெற்று எனது சித்தி, அண்ணன் மகன்கள் அனைவரும் வாதியிடம் பிரச்சனை செய்யமாட்டோம் என காவல்நிலையத்தில் புகார் கொடுத்துள்ளார்கள் என்றால் அதுபற்றி தெரியாது.

5) எனது அண்ணன் மகன்கள் இவ்வழக்கில் தரப்பினர்களா என்றால் என் அண்ணன் செல்வராஜ் இறந்த பின்னிட்டு அவரது வாரிசுகளை சேர்த்துள்ளனர். என்னிடம் காட்டப்படும் கையெழுத்து என் அண்ணன் செல்வராஜ் உடையதா என்றால் ஆமாம். அந்த கையெழுத்து **வா.சா.ஆ.12** ஆக குறியீடு செய்யப்படுகிறது. என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ-9 ல் உள்ள புகைப்படத்தில் இருக்கும் இடம்தான் தாவா இரண்டாம் அயிட்ட சொத்து என்றால் சரிதான். அதில்தான் எங்கள் கோவில் வீடு இருந்தது. அதில் எங்கள் பங்காளிகள் சேர்ந்து மரங்கள் வைத்தோம். மரங்கள் வைத்ததாக என் பதிலுரையில் சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. நான் தாக்கல் செய்துள்ளபி.சா.ஆ.1 புகைப்படத்தில் உள்ள இடத்தின் சர்வே எண் என்ன என்றால் எங்கள் குலதெய்வம் ஊருக்கு தெற்குபுறம் உள்ளது. சர்வே எண் தெரியவில்லை.

6) மேற்படி புகைப்படத்தை யார் எடுத்தது என்றால் எங்கள் பங்காளி ரமேஷ் எடுத்தார். அவரது கைபேசியில் புகைப்படம் எடுத்து கடையில் பிரிண்ட் செய்தோம். எந்தக்கடை என்றால் தோகைமலையில் உள்ள ஒரு கடை. பெயர் தெரியவில்லை. மேற்படி புகைப்படம் இவ்வழக்கிற்காக மேற்படி இடத்தை உருவாக்கி நாங்களாக எடுத்தது என்றால் சரியல்ல. பி.சா-ஆ.1 முதல் பி.சா.ஆ-6 வரையிலான புகைப்படங்கள் அனைத்தும் இவ்வழக்கிற்காக தயார் செய்யப்பட்டவை என்றால் சரியல்ல. மேற்படி புகைப்படங்களை பென்டிரைவில் யார் பதிவு செய்து கொடுத்தது என்ற விபரம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். வாதி தாவா 1, 2 அயிட்ட சொத்துக்களை பூர்வீகமாக அனுபவம் செய்து வருகிறார்எ ன்றும், அவரது அனுபவத்திற்கு இடையூறு செய்ததால்தான் அவர் இவ்வழக்கை தாக்கல் செய்தார் என்றால் சரியில்ல. தாவா 2 ம் அயிட்ட சொத்திற்கு முறையாக பட்டா கேட்டு விண்ணப்பித்துள்ளார் என்றால்

சரியல்ல. நீதிமன்ற ஆணையர் தாவா சொத்தை பொறுத்து தெளிவாக அறிக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல. வேண்டுமென்றே வாதிக்கு தொல்லை கொடுக்கும் நோக்கத்தில் எங்கள் பங்காளிகள் அனைவரும் சேர்ந்து பொய்யாக எதிர்வாதம் செய்கிறோம் என்றால் சரியல்ல. தாவாப்படி தீர்ப்பாக வேண்டும் என்றால் சரியல்ல.

Taken down by me in open court read over interpreted in the witness and acknowledged by him /her to be correct.

Sd/-R.தமிழரசி

**Principal District Munsif,**

Kulithalai.